**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.218/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.8<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : வைத்தியலிங்கம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பரமசிவம் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.06.2024

**முதல் விசாரணை**

நான் கோவை மாநகர வெரட்டிஹால் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு உடுமலை காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 08.05.2015 ம் தேதி உடுமலை குற்ற எண்.330/15 இதச பிரிவு 454,380 இந்த வழக்கை எனக்கு முன்பு சட்ட ஒழுங்கு ஆய்வாளராக இருந்த தவமணி என்பவர் நான் வேறு அலுவலில் இருந்ததால் முதல் விசாரணை செய்துள்ளார். அவரது கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம். 03.05.2015 ம் தேதி மாலை 06.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோபால், ஐசக் எடிசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் வரைபடம் தயார் செய்துள்ளார். வரைபடம் **அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சாட்சிகள் லாசன், கல்பனா, சுபிஷ், ரங்கநாதன் விஷ்வநாதன், கோபால், லாசர் எடிசன், கார்த்திகேயன், மயில்சாமி, கண்ணன், சுரேஷ், தாஜிதினன், துரவியராஜ், சங்கர்,ராஜேஷ், யேசுதாஸ், பன்னீர்செல்வம், அபுபக்கர் சித்திக் , விஜயகுமார், கந்தசாமி, மற்றும் ஒரு செந்தில்குமார், செல்வன் சையது இப்ராகிம், மனோகர், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு

29.06.2015ம் தேதி இவ்வழக்கின் தனி அலுவலாக நியப்பட்டிருந்த மடத்துக்குளம் ஆய்வாளர் பார்த்திபன் என்பவர் கொடுத்த தகவலின் படி தாராபுரம் ரோட்டில் உள்ள யுனியன் வங்கி அருகில் இவ்வழக்கின் எதிரிகளான சையது இப்ராகிம், அவரது மனைவி சம்சத் ஆகியோர்களை விசாரித்துக்கொண்டிருந்தார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான நான் சென்று இருவரையும் விசாரணை செய்தேன். அ ப்போது அவர்கள் இந்த வழக்கின் குற்ற சம்பவத்தில் தாங்கள் இருவரும் சேர்ந்து செய்ததாக ஒப்புக்கொண்டார்கள். ஆகவே சையது இப்ராகிம் என்பவரை 11.10 மணிக்கு கைது செய்தேன். சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் சண்முகநாதன், லிங்கசாமி, ஆகியோர் முன்னிலையில் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ராமசாமி நகர் ஹவுசிங் காலணியில் லாசர் என்பவரது வீட்டில் பகலில் திருடியதையும் அதை தனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதையும் ஒப்புக்கொண்டார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மதியம் 02.15 மணிக்கு எதிரி அவரது வீட்டிற்கு சென்று அவரது வீட்டு படிக்கட்டுக்கு கீழ் சிமெணட் சிலாப்க்கு அடியில் மறைத்து வைத்திருந்த நகைகளை எடுத்து ஆஜர் செய்தார். அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் 19 அயிட்டங்களை கைப்பற்றினேன். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவரது மனைவி சம்சத் என்பரை 13.00 மணிக்கு கைது செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு கம்பியை பெரியார் காலணியில் உள்ள பாரத்தின் வீட்டில் மறைத்து வைத்துள்ளாக கூறியதன் பேரில் அங்கு 03.15 மணிக்கு சென்று 2ம் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய இரும்பு ராடு ஒரு பக்கம் உருண்டையாகவும், மற்றொரு பக்கம் V வடியில் இருந்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். சாட்சிகள் லாசர் மற்றும் கல்பனா ஆகியோர்களை மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் சண்முகநாதன் லிங்குசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.06.2015ம் தேதி மாலை 06.00 மணிக்கு சையது இப்ராகிமை 3 நாட்கள் போலிஸ் காவலில் எடுத்தேன். 30.06.2015ம் தேதி 07.00 மணிக்கு சாட்சிகள் கல்பனா, சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரிகளிடம் மறு ஒப்புதல்வாக்குமூலம் பெறப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியவாறு குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தி XL TVS Super மற்றும் தங்க நகைகளை மறைத்து வைத்திருப்பதையும் அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறினார். அதே சாட்சிகள் முன்னிலையில் 01.07.2015ம் தேதி 12.30 மணிக்கு அவரது வீட்டு சிலாப்பிற்கு அடியில் மண்ணில் பாலிதின் கவரில் புதைத்து வைத்திருந்த விக்ஸ் டப்பாவில் சிலுவை போட்ட செயின் ஒன்றும் பேப்பரில் ஒரு ஜோடி வளையல் ,TVS XL Super பதிவு எண் இல்லாதது, சுமார் 12.4 கிராம் எடையுள்ள தங்க பட்டை செயின் ஒன்று, 500 மில்லி எடையுள்ள பித்தளை சிலுவை ஒன்று, புளூ கலர் விக்ஸ் டப்பா என்று எழுதப்பட்ட டப்பா ஒன்றும், பாலிதின் கவர், ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி படிவம் 91 வழியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

கைப்பற்றுதல் மகசர் **அசாஆ.12 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.) படிவம் 91 **அசாஆ.13 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.) 28.07.2015 ம் தேதி சாட்சிகள் பாத்திமாபீபி, அலாவுதின், சேக்தாவுத் என்ற செல்லப்பா, அகமது சலிம், முகமது இலியாஸ், சபியம்மாள், மும்தாஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். லாசர் கல்பணா என்பவரை மறு விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.12.2015 ம் தேதி வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்தது 03.05.2015 ம் தேதி காலை 09.00–10.15 என்றால் சரிதான். புகார் கொடுத்தது 03.05.2015 ம் தேதி மாலை 05.00 மணி என்றால் சரிதான். 7 மணி நேரம் காலதாமதம் என்றால் சரிதான். புகாரில் தங்க நகைகளுடன் கவரிங் நகைகளும் கட்டி வைத்திருந்தாக இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 கிமீ. திருட்டு போனதாக சொல்லப்படும் நகைகள் 93 பவுன் சுமார் ரூ.13,95,000/– மதிப்புள்ளது என்றால் சரிதான். 1 ம் எதிரி புகார்வாதியின் கடையில் வேலை செய்து வந்தார் என்பதை தெரிந்து கொண்டிர்களா என்றால் ஆம்.

2. புகார்வாதியின் வீட்டிற்கு அருகில் குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நாய் வளர்த்தாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி விசாரிக்கவில்லை. சம்பவத்திற்கு முன்பு 1 மற்றும் 2 ம் எதிரி புகார்வாதியின் வீட்டிற்கு வந்ததாக தெரிந்து கொண்டிர்களா என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது தவறு என்றாலும், புகார்தாரர் 1 மற்றும் 2 எதிரிகள் சம்பவத்திற்கு முன்பு தனது வீட்டிற்கு வரவில்லை என்று கூறியுள்ளார் என்றால் தவறு. மிகப்பெரிய குற்றமாக கருதப்பட்ட நிலையில் கைரேகை நிபுணர்களை வரவைக்க நடவடிக்கை எடுக்கவில்லையா என்றால் நான் செய்யவில்லை. முதல் விசாரணை அதிகாரி செய்தாரா என்பது பற்றி தெரியவில்லை. மோப்ப நாய் வரவைக்கப்பட்டது பற்றி தெரிந்து கொண்டிர்களா என்றால் தெரியவில்லை. மோப்ப நாய் யாரையும் பிடிக்கவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி முக்கியமான விவரங்களை தெரியாத நிலையில் முறையாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. சம்பவம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் நடந்துள்ள நிலையில் வீட்டிற்குள் சரளமாக சென்று புழங்கி வருவர் தான் இக்குற்றத்தை செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்வாதி 26.09.2015 ல் மறு விசாரணை செய்துள்ளிர்கள் என்றால் சரிதான். 28.07.2015 ல் புகார்வாதி வாக்குமூலத்தில் வீட்டு அருகில் KL பதிவு கொண்ட வாகனம் வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது பற்றி விசாரித்திர்களா என்றால் விசாரித்தேன் தகவல் இல்லை. பொதுவாக தங்க நகைகளை கவரிங் நகையுடன் சேர்த்து கட்டி வைக்க மாட்டார்கள் என்றால் தெரியாது.

4. 20.011.2015ம் தேதி அ.சா.1யிடம் மறு வாக்குமூலம் செய்தபோது காணாமல் போன 93 பவுனில் 28 ½ பவுன் மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மற்ற நகைகளை எதிரி சுயலாபம் கருதி மறைத்து வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இன்றைய வரை மீதம் உள்ள நகைகளை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரணையில் தகவல் கிடைக்கவில்லை. 28 ½ பவுன் தவிர மீதம் உள்ள நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் சரிதான்.

5. அ.சா.2 கல்பனாவிடம் 29.06.2015, 29.08.2015 ஆகிய தேதிகளில் விசாரணை செய்துள்ளிர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி சுகின்சிங் என்பவரிடம் செல்போன் பில், செல்போன் பெட்டியும் கைப்பற்றியுள்ளிர்கள் என்றால் சரிதான் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் எங்கு வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றால் தாராபுரம் யுனியன் வங்கி, அந்த பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த சாட்சிகள் லிங்குரலாஜ் பஞ்சாயத்து அதிகாரி என்றால் சரிதான்.

6. பொதுமக்களை ஏன் விசாரிக்கவில்லை என்றால் மகசர் சாட்சிக்கு இரண்டு சாட்சிகள் போதும் என்பதால் மற்றவர்களை விசாரிக்கவில்லை அரசு அதிகாரிகளை விசாரிக்க முன் உரிமை கொடுப்பார்கள். நீங்கள் சொன்னபடி உண்மையாகஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அதனால் தான் பொதுமக்களை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல

7. பார்வை மகசர், வரைபடத்தில் சம்பவ இடங்களாக 3 இடங்கள் குறித்துள்ளிர்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எப்படி வாங்கப்பட்டது என்றால் லேப்டாப்பில் தட்டச்சு செய்யப்பட்டது. யார் தட்டச்சு செய்தது என்றால் நான். எங்குவைத்து என்றால் ஒப்புதல் வாக்குமுலம் பெற்ற இடத்தில் வாகனத்தில் வைத்து டைப் செய்தேன். எங்கு பிரிண்ட் எடுத்திர்கள் என்றால் காவல் நிலையத்திற்கு அனுப்பி பிரிண்ட் எடுக்கப்பட்டது. அந்த பிரிண்ட் எடுத்த நபரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நகை மதிப்பீட்டாளர் லோகநாயகி என்பவரை விசாரித்துள்ளிர்கள் என்றால் விசாரித்தேன் சாட்சி பட்டியலில் போடவில்லை. அவரும் 28 ½ பவுன் தான் நகையின் எடை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

8. குற்ற இறுதி அறிக்கையில் காணாமல் போன மீத நகைகள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் மீதம் உள்ள நகைக்காக மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் தகவல் இல்லாததால் எடுக்கவில்லை. புகார்தாரர் பெரிய கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அவருக்கு காவல் உயர் அதிகாரிகள் நெருங்கிய தொடர்பு உடையதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் தெரியவில்லை, அதனால் தான் சரியாக விசாரிக்காமல் 93 காணாமல் போனதாக வழக்கு

போட்டுள்ளிர்கள் என்றால் சரியல்ல.

9. உயர் அதிகாரிகள் கூறினால் அதிக நகைகளை பெறலாம் என்ற ஆசையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சின்ன பொருட்களை பெரியார் நகரில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

10. பார்வை மகசர், வரைபடம், முறையாக தயார் செய்யவில்லை என்றாலும், சொன்னபடி எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், எதிரிகளிடம் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithykala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.